# ஆத்மஜோதி



ஏழாலை அம்பலவாணேஸ்வரர் தேர்

விரோதகிருது ௵ வைகாசி - ஆனி 1971.






ஓர் ஆத்மீக மாத வெளியீடு

எல்லா உலகிற்கும் இறைவன் ஒருவன்
எல்லா உடலும் இறைவன் ஆலயமே. - சுத்தானந்தர்

ஜோதி-23 - விரோதகிருதுஸ் - வை, ஆனி மீ 1ம்உ [15-5-71] - சுடர் - 7-8


# பொருளடக்கம்


| | |
|---|---|
| பெரியதம்பிரான் தோத்திரம் | 177 |
| கும்மி | 178 |
| ஏழாலே | 179 |
| அற்புதங்கள் | 188 |
| தேர்த்திருப்பணி | 195 |
| இயற்கையே சோதிடம் | 200 |
| நரகமும் பாவமும் | 206 |
| இறைவனை மறவாத கலயனர் | 221 |
| புலன்கள் ஐந்தும் புரியட்டும் | 224 |


## ஆயுள் சந்தா ஆதரவாளர்

திருமதி. யோகாம்பிகை கந்தையா - குருநாகல்.

## ஆத்மஜோதி சந்தா விபரம்


ஆயுள்சந்தா 100-00
வருட சந்தா 5-00
தனிப்பிரதி சதம் 50

கௌரவ ஆசிரியர் திரு. க. இராமச்சந்திரா
பதிப்பாசிரியர் திரு. நா. முத்தையா

ஆத்மஜோதி நிலையம்,
நாவலப்பிட்டி போன்: 353

# ஆத்மஜோதி நிலைய வெளியீடுகள்

| | | |
|---|---|---|
| 1 | திருப்புகழ் பூஜாமலர் | .50 |
| 2 | சமரச ஞானக் கோவை - க. இராமச்சந்திரா | 5.00 |
| 3 | ஆத்மநாதம் - மகரிஷி சுத்தானந்தர் | 3.00 |
| 4 | தீங்கனிச் சோலை - பரமஹம்சதாசன் | 2.50 |
| 5 | சைவ இலக்கிய கதா மஞ்சரி - அருணாசல தேசிகர் | 3.00 |
| 6 | பாட்டாளி பாட்டு - மகரிஷி சுத்தானந்தர் | 1.50 |
| 7 | இளங்கோவின் கனவு - நடராஜன் | 2.25 |
| 8 | ஆத்மஜோதி மலர் | 1.00 |
| 9 | நவராத்திரிப் பாடல் | .50 |
| 10 | கந்தரனுபூதி | .15 |
| 11 | கந்த சஷ்டி கவசம் | .15 |
| 12 | நித்திய கரும விதி | .25 |
| 13 | செல்லச்சந்நிதி பாடல் | .15 |
| 14 | கதிர்காமப் பதிகம் | .25 |
| 15 | மார்கழி மாதப் பாடல் | .20 |
| 16 | பித்துக்குளி முருகதாஸ் பாடல் | .50 |
| 17 | திருநீற்றின் பெருமை | .10 |
| 18 | தருமம் | .20 |
| 19 | சிவானந்தரின் அருளுரைகள் | .60 |
| 20 | இவ்வாறு அருள்கிறார் சிவானந்தர் | .75 |
| 21 | பக்தி | .20 |
| 22 | பௌத்தம் | .20 |
| 23 | பிரமம் | .20 |
| 24 | அவதாரம் | .20 |
| 25 | முக்கிய உபநிஷதங்களின் சாரம் - பாகம் 1-10 | 2.50 |
| 26 | சுவேதாசுவத உபநிஷத விளக்கம் | .50 |
| 27 | சண்முககவசம் | .50 |
| 28 | சகல கலாவல்லி மாலை | .25 |
| 29 | மதுபானம் விளைவிக்கும் மகா நாசம் | 1.00 |
| 30 | ஸ்ரீ சத்ய சாயி கீதம் | 1.00 |

தபாற்செலவு தனி.

வியாபாரிகட்குத் தகுந்த கமிஷன் உண்டு.

ஆத்மஜோதி நிலையம், நாவலப்பிட்டி. (இலங்கை)

# பெரியதம்பிரான் தோத்திரம்

ஏழ்தடங் கடல்சூழு மவனிதனி லடியாரை
இரட்சிக்க வருதம்பிரான்
இகல்மன்னர் புகழ்தென்னி லங்கையனு ராசபுரி
யிருந்தே வருந்தம்பிரான்
காளியர் குலந்தழைத் திடவந்த தம்பிரான்
காய்ம்பனையொர் பூம்பனையதாய்க்
கற்பனைசெய் தம்பிரான் சொற்பனையை யீஞ்செனக்
காட்டிநாட் டியதம்பிரான்
வேள்விபெறு தம்பிரான் வேழமொன் றினையன்று
மீட்டெழுப் பியதம்பிரான்
விதைகொள்கரு நாவிலிற் கனியில்விதை யில்லாது
மிகுபுதுமை புரிதம்பிரான்
வாழ்வுபெறு தம்பிரான் ஏழுகன் னியநாச்சி
மாரைநம் பியதம்பிரான்
மகமாயி கிருபைபெற் றருளுமே ழாலைநகர்
வருபெரிய தம்பிரானே.

திருமருவு மொருகயிற் சூலந் துலங்கச்
சிலம்பொருகை தனியிலங்கச்
செம்பொற் சதங்கையிரு தாளிற் றுலங்கத்
திருத்தோள்க ளுங்குலுங்க
மருமருவு மலர்மாலை வடநொக்கு மாலைகள்
வனப்புட னசைந்துநீட
வந்தகவி வாணர்கள் வணங்குமவ ருள்ளத்தில்
மாறுத கருணைநீட
கருமருவு மேகங்கள் துயில்மருது முதலான
கடிமலர்க் குளமேவிடும்
கங்கைதரு பழனமிகு மேழாலையம்பதிக்
கடவுளே கருணைவடிவே
தருதரித திறுததிட எனநடன மிடுபெரிய
தம்பிரா னுமதுகமலச்
சரணந் தினனன்பான கருணைதந் துதவியெனைத்
தற்காத்து ஆளுவீரே. (பழைய பாடல்

# கும்மி

ஏழாலை யென்றொரு ஊருமுண்டு அதில்
ஏழு ஆலையங்கள் தானுமுண்டு
ஏழு ஆலையங் கொண்டதாலல்லவோ
ஏழாலையென்றே பேர்வகுத்தார்.

ஏழுதலத்தினிற் பேரும் விளக்கிறேன்
ஏமாந்து நில்லாமற் கேளுங்கடி
எல்லார்க்கும் முன்னாய் விநாயகர் பாதத்தை
ஏற்றிக்கும்மி யடியுங்கடி.

மாதொருபாகனை மாமுடி சூடிய
வள்ளலெனுஞ்சிவ னைக்கதியேறிய
மாமயில்வாக னெனுஞ் சிவசுப்பிர
மணியன்திருவடி போற்றுங்கடி.

பத்திரை கேள்வனைப் பார்பதியைக்கேத்ர
பாலனை யேழாலை யம்பதியிற்கிருபை
வைத்தடியார்க்கரு ளும்பெரியதம்பி
ரானை மகிழ்ந்து துதியுங்கடி.

## விருத்தம்

கரியகாயைக் கனியாக்கிய தெய்வம்
கரிமரிக்க வுயிராக்கிய தெய்வம்
சரியவாதைக் கணக்கு வழக்கினுற்
சத்தியஞ் செய்யச் சாட்சியுண்டாந் தெய்வம்
ஏரியிலே நடமாடியவோர் தெய்வம்
ஏழாலைப்பதி வாழுமுண்மைத் தெய்வம்
பெரியதெய்வ மெனும் பேருமக்கலாற்
பின்னைவேறொரு தெய்வத்துக்கில்லையே.

(பழைய பாடல்)

# ஏழாலை

(ஆசிரியர்)

'சிதம்பரம் போய் வருகிறேன்' என்று ஒருவர் கூறினுல் நடராஜப் பெருமானைத் தரிசித்து வருகிருர் என்பது அர்த்தம். திருப்பதிக்குப் போய் வருகிறேன் என்று இன்னெருவர் கூறினுல் திருப்பதி வெங்கடேஸ்வரப்பெருமானைத் தரிசித்து வருகிருர் என்பது கருத்து. சிதம்பரத்திலே அண்ணுமலைச் சர்வ கலாசாலை உண்டு; பெரிய சினிமாத் தியேட்டர்கள் உண்டு. திருப்பதியிலும் அப்படி உண்டு. இவ்வூர்ப் பெயர்களை கூறிய உடனே அங்குள்ள கோயில்களையே குறிப்பது போன்று ஏழாலை என்ற உடனே ஏழு ஆலயங்களுமே நினைவுக்கு வரும். ஏழு ஆலயம் என்பது திரிந்து ஏழாலை என வந்தது. ஏழு ஆலயங்கள் ஒரே சூழலில் அமைந்திருப்பதை நாம் இன்றும் காணலாம்.

நீர்வளமும், நிலவளமும் சிறந்தது ஏழாலை. 14, 15 அடி ஆழத்திலே நாள் முழுவதும் இறைத்தாலும் வற்ருத நீர்ப் பெருக்குடைய பல கிணறுகள் உள்ளன. சிறிது வற்றிய கிணறுகளும் ஒரு சில நிமிடங்களுக்குள்ளே ஊற்று மிகுந்து பழைய நிலையை அடைந்து விடுகின்றன. நீர் மிகத் தெளிவுடையது. தண்ணீருக்கு ருசி இல்லாவிடினும் முதன் முதல் ஏழாலையில் தண்ணீரை அருந்துபவரை நல்ல ருசியுடைய தண்ணீர் என்று சொல்வதைப் பல முறை கேட்டுள்ளேன். இப்படி ருசியான தண்ணீரைக் குடித்த ஒரு அயலூர் அன்பர் இந்தக் கிணற்றில் ஒன்றைத் தம்மூருக்கு எடுத்துக் கொண்டு போனுலோ என்று நினைத்தார். அதனைச் செயலில் முடிக்கவும் தொடங்கினுர். இரவு நடுச்சாமம் இருக்கும் இருபத்தைந்து ஆட்களுடன் வந்து சேர்ந்தார். மண்வெட்டி, கடப்பாரை கயிறுகளுடன் வந்து கிணற்றைத்

தூக்குவதற்கேற்ற முஸ்தீபுகளைச் செய்தனர். இந்த ஆரவாரம் கேட்டு விழித்த ஊர் மக்கள் அவர்களது அறியாமைக்கு இரங்கி ஏழாலையில் கிணறு காவிகள் என்றப் பட்டப்பெயரை அளித்து அனுப்பி வைத்தனர். இவர்கள் சூட்டிய பட்டப்பெயர் கால கதியில் இவர்களுக்கே வழங்கி வரவும் செய்தது.

நான் ஏழாலைக் கிராமத்தைச் சேர்ந்தவன் என்று யோகர் சுவாமிகளுக்கு நன்கு தெரியும். என்னைக் கண்டவுடன் 'கிணறு காவப் போகவில்லையோ?' என்று சுவாமிகள் கேட்பார்கள். 'ஏழாலைக் கிணறு காவி' என்று அயலூர் நண்பர்கள் இளமையில் எம்மைப் பகிடி பண்ணுவது வழக்கம். அவர்கள் பேச்சைக் கேட்கும் போது உள்ளத்தில் ஆத்திரம் பொங்கி வரும். இதனை அறிந்து தானோ என்னமோ சுவாமிகள் என்னைக்காணும் போதெல்லாம் 'ஏழாலையில் கிணறு காவி' என்று அழைப்பார்கள். 'நின் அடியாரில் ஏசப்பட்டேன்' என்று மணிவாசகப் பெருமானுர் கூறியது போல யோகர் சுவாமிகளால் அழைக்கப் படுவதைப் பெருமையாகக் கொண்டேன். அதனுல் மனமும் சாந்தி அடைந்தது. அதில் குறையொன்றும் இருப்பதாகத் தெரியவில்லை.

ஒரு நாள் சுவாமிகள் தனிமையில் இருக்கும் போது சுவாமியைச் சென்று தரிசிக்கும் வாய்ப்புக் கிடைத்தது. கண்டதும் ஏழாலையில் கிணறு காவி வந்து விட்டார் என்று கூறினுர்கள். நானும் சுவாமிகளுடன் வேடிக்கையாகப் பேசச் சந்தர்ப்பங்கிடைத்ததே என்று நினைந்து மாரிகாலத்தில்தான் சுவாமி வெள்ளத்தினுல் கிணற்றுச் சுவர்கள் காவி நிறமாயிருக்கும். இப்போ கோடையானபடியினுல், நிறம் மாறிவிட்டது என்றேன்.

சுவாமிகள் உரக்கச் சிரித்துக்கொண்டே, நல்ல கருத்துத் தான். உனக்கும் ஊர் அபிமானம் இருக்கிறது போல என்று கூறி,

'பெற்றதாயும் பிறந்தநன்றுடும்
நற்றவவானிலும் நனிசிறந்தனவே'

என்ற பாடலையும் கூறி, கொஞ்சநாளைக்கு இந்த அபிமான மும் இருக்கத்தான் வேண்டும். இந்த அபிமானங்கள் எல் லாம் ஒழிந்தால்தான் காணும் கடவுளைக் காணலாம் என் றும் சொன்னுர்.

எங்கள் ஊர் மண் நன்கு சிவந்தமண். எங்கள் ஊர் மண்ணில் வெறுங்காலோடு நடந்தால் காலில் ஒட்டிய மண்ணின் நிறம் மாற ஒரு வாரம் செல்லும். இரும்புச் சத்து நிறைந்த மண். காய்கறியும் பழவகையும் மிக ருசி யானவை. பாகற்காயை யாரும் விரும்பி உண்பதில்லை. ஏழாலையில் பாகற்காய் என்ருல் விருப்பத்தோடு வாங்கிச் சென்று சமைத்து உண்பது வழக்கம். அதற்கென்று தனிப் பட்ட ருசி ஒன்று உண்டு.

நீர்வளமும் நிலவளமும் பொருந்திய ஏழாலை வாசிகள் பக்திவளமும் பொருந்தியவர்கள் என்பதற்கு ஊரின் பெய ரே சாட்சியாகும். சிவாலயம், விக்னேஸ்வரர் ஆலயம், சுப்பிரமணியராலயம், ஈஸ்பரி ஆலயம், வயிரவர் ஆலயம் வீரபத்திரர் ஆலயம், பெரியதம்பிரான் ஆலயம்ஆகிய இந்த ஏழு ஆலயங்களும் ஒரு சுற்றுவட்டாரத்தில் அமைந்துள் ளன. இவற்றைவிட, பதினைந்துக்கதிகமான சிறு ஆலயங் களும் இவ்வூரில் உண்டு.

கந்தபுராணம், பெரிய புராணம், திருவிளையாடற் புரா ணம், திருவாதவூரடிகள் புராணம் படித்துப் பயன் சொல் லும் வழக்கம் அன்றுதொடக்கம் இன்றுவரை இக்கோயில் களிலே நடைபெற்றுவருகின்றது. விரதம் அனுட்டித்துப் புராணம் கேட்கும் வழக்கம் மக்களிடையே பரம்பரையாக வேரூன்றி உள்ளது. எங்கள் ஊரில்வாழ்ந்த தம்பையாஉபா த்தியாயர், அருளானந்தசிவம், இராமசாமிபோன்ற பெரிய வர்கள் அயலூர்களிலும் அழைக்கப்பட்டு, அவர்கள் [illegible]ிய பயனுல் பயன்பட்டமக்கள் இன்றும் பலர் இருக்கின்[illegible]ர்.

மக்களில் நூற்றுக்கு நூறு வீதமானோர் கமக்காரர். கமக்காரருக்கு உதவியான மற்றைய எல்லாத் தொழிலாளர்களும் இங்கு வசிக்கின்றார்கள். ஒருவருக்கொருவர் உதவியாக இணைந்து வாழ்வதால் சாதிவேறுபாடற்ற சமூகம் ஒன்று வாழ்ந்து வருவதை இன்றும் பார்க்கமுடிகிறது. அதிகாலை 3 மணிக்கே மக்கள் நித்திரைவிட்டெழுந்து தோட்டங்களுக்குச் சென்று பயிர்களுக்கு நீர் பாய்ச்சி தோட்டப் பயிர்களில் பெற்றுக்கொள்ளும் பயன்களைச் சுன்னாகச் சந்தைக்குக் கொண்டுசென்று விற்று காலை 9 மணிக்குள் வீடுவந்தடைந்து விடுவர். மறுபடியும் மாலை 4 மணிக்குத் தோட்டம் சென்று இரவு 7 மணி வரை வீடுவந்துசேர்வர். இடைப்பட்ட நேரத்திலே வீட்டில் புராணங்கள், திருமுறைகள், பாரதம், இராமாயணம் போன்ற நூல்கள் படித்து மகிழ்வர். இந்த வாழ்க்கை அந்தக்காலம். காலச் சுழற்சியின் வேகத்தினால் இந்தக்காலத்தில் பல குடும்பங்களுக்கிடையே வாழ்க்கைமுறை மாறியிருந்தாலும் சில குடும்பங்களுக்கிடையே அந்த வாழ்க்கை இன்றும் இருந்துவரத்தான் செய்கின்றது. சமய அனுட்டானம் அருகிவரும் இக்காலத்திலும் இக்கிராமத்தில் சமயதீட்சை பெறாதவர்களைக் காண்பது அரிது.

கமக்காரர்கள் விபூதித் திருக்கோலத்துடன் தோட்டத்துள் நின்று வேலைசெய்யும்போது பார்த்தால் சிவனடியார்கள்தான் [கமத்தொழில் செய்கிறார்களென்று சொல்லத் தோன்றும். வாழையில் முதல்தரமான பழத்தையும் பசு கன்றுபோட்டால் முதல் எடுக்கும் பாலையும் கோயிலுக்குக் கொடுக்கும் பழக்கம் இன்றுமுண்டு.

எனது தகப்பனாருடைய தகப்பனாரிடம் பல பால்தரும் பசுக்கள் இருந்தன. மருந்துக்கு என்றும், நோயாளிக்கு என்றும், கோயிலுக்கு என்றும் மக்கள்வந்து பால் வாங்கிச் செல்வதுண்டு. பால் காசுக்கு விற்றால் பாவம் என்று கருதியது அந்தக்காலம்; தகப்பனார் காலத்தில் கோயிலுக்குப் பால் சும்மாகொடுத்தாலும் பால் காசுக்கு விற்றார்கள்.

எனது காலத்தில் பசுக்களை பலரிடம் இல்லை. பசு வைத்திருப்பவர்களும் தண்ணீர் கலக்காமல் பால் விற்றால் பாவம் என்று சொல்லும் அளவுக்கு மனநிலை மாறி உள்ளார்கள். மூன்று தலைமுறைகளுக்கிடையே தருமத்தின் நிலை இப்படியாகி உள்ளது.

இன்றும் எங்கள் ஊரில் உள்ளவர்கள் கோயிலில் அபிஷேகம் என்றால் பால், இளநீர், கரும்பு போன்ற பொருட்கள் இனமாகவே கொண்டுசென்று கொடுக்கும் வழக்கம் உடையவர்களாய் இருக்கின்றார்கள். இறைவனுக்கு அர்ப்பணிக்கும் பக்திப் பண்பாடு பரம்பரையாக இருந்துவருகின்றது.

எங்கள் ஊரில் கோயில் பல எழுந்ததற்கு நண்பர் ஒருவர் வேடிக்கையான கதை ஒன்று கூறினார். ஒரு கோயிலில் புராணம் படித்துவந்தார்கள். பெரியவர் ஒருவர் வழக்கமாக ஒரு தூணில் சாய்ந்திருந்துகொண்டே புராணத்தைக் கேட்டுவந்தார். பல ஆண்டுகளாக அத்தூண் அவருக்கே சொந்தமாகிவிட்டது. ஒருநாள் அப்பெரியவருக்கு வேண்டாத ஒருவர் வந்து பெரியவர் இருந்த இடத்தைப் பிடித்துக்கொண்டார். பெரியவர் வந்து செருமினார், உறுமினார் இருந்தவர் அசையவில்லை. அடுத்தநாளே பெரியவர் அக்கோயிலுக்குப் போட்டியாக ஒரு கோயில் கட்ட ஆரம்பித்து திருப்பணிமுடித்து பூசையைக் குறைவற நடத்தியதோடு முன்னைய கோயிலில் படிக்காத புராணங்களையும் படிக்கச் செய்தார். இந்த நிகழ்ச்சி உண்மையாக இருந்தாலும் அதனை நாம் வரவேற்கவேண்டியதொன்றே. போட்டியினால் மனித சமுதாயமே அழிந்துபோகிற செயல்கள்பல நிகழ்வதைப் பார்க்கிறோம். இப்போட்டியினால் கோயில் ஒன்று கிராமத்திற்குக் கூடியது. இத்தகைய போட்டி வரவேற்கப் படவேண்டியதே.

கோயில்களைக் ஹரிஜனங்களுக்குத் திறந்துவிட வேண்டுமென்ற கிளர்ச்சி தோன்றுவதற்கு முன்னமேயே எங்க

ளூர்க் கோயில்களுக்குள் சைவசமயத்தவர்கள் சாதி பேத மின்றி வரத்தலைப்பட்டுவிட்டனர். இதற்கு மூலகாரணமாக இருந்தவர் சைவசித்தாந்த வித்தகர் உயர்திரு. ஐ. பொன்னை யா அவர்கள். அவர்கள்தான் பிற்காலத்தில் அருளானந்த சிவம் என்ற பெயரோடு விளங்கினூர்கள். ஹரிஜனர்களு டன் உடனிருந்து உண்டு, பாடசாலைகளில் ஹரிஜனப்பிள்ளை களுக்கு சமாசனம் கொடுத்து ஹரிஜனங்களுக்குச் சமயதீட் சையும் வைத்துச் சமரசத்தை முதன்முதல் உண்டாக்கிய பெருமைஉயர்திரு. அருளானந்த சிவம் அவர்களையேசாரும்.

இந்தியாவிலிருந்து ஈழத்திற்கு வரும் சைவ சித்தாந்தப் பேரறிஞர்கள் அருளானந்த சிவம் அவர்களைச் சந்தித்து அவ ருடன் உரையாடியே செல்வர். அவர்களால் உண்டாக்கப் பெற்ற நால்வர் மடாலயம் அவ்வூர் மக்களின் அடியார் பக்திக்கு ஒரு எடுத்துக்காட்டாக விழங்குகின்றது. பரம கம்சருக்கு விவேகான்ந்தர்போல சடைவரத சுவாமிகளுக்கு அருளானந்தசிவம் அவர்கள் வாய்த்தார்கள்.

கடையிற்சுவாமிகளுடைய பரம்பரையில் வந்தவர்கள் சடைவரத சுவாமிகள். அவருடைய சீடர்தான் அருளா னந்தசிவம். ஆகவே கடையிற் சுவாமிகளுடைய அடியார் பரம்பரை ஒன்று எங்கள் கிராமத்திற்கு ஆசிகூறிவருகிறது என்ருல் அது மிகையாகாது.

ஏழாலை யாழ்ப்பாணத்திலுள்ள கிராமங்களுள் மிகப் பெரியது. வடக்கே மயிலிட்டி குரும்பசிட்டியையும் கிழக்கே புன்னாலைக்கட்டுவனையும் தெற்கே ஊரெழு சுன்னுகத்தையும் மேற்கே மல்லாகத்தையும் எல்லையாக உடையது. ஏழாலைக் கென்றே தனியான கிராமச் சங்கமும் தபாற்கந்தோரும் அமைந்துள்ளன. இக்கிராமம் வடக்கு, கிழக்கு, தெற்கு, மேற்கு, மத்தி என்ற ஐந்து பெரும்பிரிவுகளை உடையது. ஆத்மீக வளர்ச்சியிலும் கல்வி வளர்ச்சியிலும் ஒரு பரம் பரையைக் காத்துவந்திருக்கின்றது இக்கிராமம். கிறிஸ்தவ மும் சைவமும் போட்டிபோட்டுக்கொண்டு வளர்ந்துள்ளன. இக்கிராமத்தில் நான்கு கிறிஸ்தவ ஆலயங்கள் உள்ளன

என்றால் அதைக்கொண்டே கிராமத்தின் பரப்பையும் மக்கள் தொகையையும் ஓரளவு யூகிக்கலாம். 8 பாடசாலைகளுக்கு இருப்பிடமாக அமைந்தது இக்கிராமம். இதனால் சராசரி குடும்பத்தில் ஒரு ஆசிரியராவது இருப்பார்.

சுன்னாகம் அ. குமாரசாமிப் புலவர் கல்வி கற்பித்த பெருமையும், சி. வை. தாமோதரம்பிள்ளை அவர்கள் பிறந்து வாழ்ந்த பெருமையும் ஏழாலையையே சேரும். மல்லாகம் சந்தியிலிருந்து கிழக்குமுகமாக ஏழாலையை ஊடறுத்துக் கொண்டு ஒரு தெரு செல்கின்றது. அது வடக்குப் புன்னாலைக்கட்டுவன் சந்தியைச் சென்றடைகின்றது. கிட்டத்தட்ட 3 மைல் தூரம்தான் இருக்கும் அத்தெரு, நாற்பதுக்கு மேற்பட்ட வளைவுகளை உடையதாய் விளங்குகின்றது. மலைநாட்டுப் பாதைகளில் பிரயாணம் செய்யாதவர்களுக்கு அதை மலைநாட்டு மாதிரியான தெரு என்று காட்டலாம். மக்கள் நெருங்கிக் குடியேறியபின்பே தெரு திறக்கப்பட்டுள்ளது. அதனால் வந்த விளைவே இத்தனை வளைவுக்கும் காரணமாகும். குரும்பசிட்டி, புன்னாலைக்கட்டுவன் ஆகிய இரு இடங்களுக்கும் யாழ்ப்பாணத்திலிருந்து இத்தெருவழியாகப் பஸ் போக்குவரத்து நடைபெறுகின்றது. இத்தெருவழியே சென்றால் நால்வர் மடாலயத்தையும் ஏழாலயங்களையும் தரிசிக்கலாம்.

தற்காலத்திலே வைத்தியரிடம் சென்றால் அவர் உடல் முழுவதையும் பரிசோதித்துவிட்டு உனக்கு என்ன செய்கிறது என்று கேட்பார். அல்லது நோயாளியை அழைத்துச் சென்றவர்களிடம் கேட்பார். அவர்கள் சொல்வதைக் கொண்டே நோயைத் தீர் மானிப் பார் கள். நோயாளி நோய்க்குரிய சில குறிப்புகளைச் சொல்லத்தவறுவதனாலும் வைத்தியர் அனுபவத்தைக்கொண்டு தீர்மானிக்கத் தவறுவதனாலும் நோயாளிகள் கஷ்டப்படுவதுண்டு. அருளானந்தசிவம் அவர்கள் கைநாடியைப் பிடித்துப் பார்த்துவிட்டு உனக்கு இன்ன இன்ன குறிகள் இருக்கின்றனவா என்று கேட்பார். அவர் சொல்லும் அத்தனை குறிகளும்

இருப்பதாக நோயாளி ஒப்புக்கொண்டபின்பே நோய் இன்னதெனத் தீர்மானித்து மருந்து கொடுப்பார். பணம் கேட்டுவாங்கும் வழக்கமோ அன்றி பில் அனுப்பிப் பணம் பெற்றுக்கொள்ளும் பழக்கமோ முற்பணம் பெற்றுக்கொள்ளும் பழக்கமோ அக்காலத்தில் இல்லை. நோய் மாறிய பின் அவர்களாக விரும்பிக்கொண்டுவந்து கொடுக்கும் பணத்தையே பெற்றுக்கொள்ளுவார்கள். பரராஜசேகரம் போன்ற பல ஆயுர்வேத வைத்திய நூல்களை அச்சுக்குக் கொண்டுவந்த பெருமை திரு. பொன்னையா அவர்களையே சாரும். திரு பொன்னையா அவர்கள் உடல் வைத்தியர் உள்ள வைத்தியர் உயிர்வைத்தியராக விளங்கினுர்கள்.

நல்ல பழைய பண்பாடுகள் கைநழுவிப்போகும் இக்காலத்தில் சில இடங்களில் மனித தருமத்துக்கொவ்வாத சில மூடக்கொள்கைகளைச் சில மக்கள் குரங்குப்பிடியாகப் பிடித்திருக்கிறுர்கள். அதற்கும் ஏழாலை ஒரு சாட்சியாக விளங்குகின்றது.

நான்கு ஐந்து தலைமுறைகளுக்கு முன் ஊரில் பெரிய ஒரு கொள்ளை நோய் ஏற்பட்டது. அதனுல் பலகுடும்பங்கள் முற்றுகவே அழிந்தொழிந்துபோயின. ஏதோ தேவசாபம் என்று நினைந்து அவ்வூர் மக்கள் இலந்தைகட்டி என்ற குறிச்சியிலுள்ள வைரவர் கோவிலில் பெரிய ஒரு வேள்வி நடத்திஞர்கள். அவ்வேள்வி மிகப்பெரியது. ஒவ்வொரு வீட்டிலிருந்தும் வேப்பமரங்கள் முதலாகப் பலவகை மரங்கள் கோயில் முன்றிலுக்கு வந்து சேர்ந்தன. யாக முடிவில் ஆட்டுக்கடா ஒன்றும் சேவல் ஒன்றும் பலிகொடுக்கப் பட்டது. யாகத்தை நடத்தியவர்கள் பலிகொடுத்த இருபிராணிகளையும், கொழுந்துவிட்டெரிந்த அக்கினியிலேயே போட்டார்கள்.

அந்த ஞாபகார்த்தம் தற்போது ஆண்டுதோறும் கொண்டாடப்பட்டு வருகின்றது. வேள்வி செய்வாரில்லை. ஆடு கோழிகளைப் பலிகொடுப்பது மாத்திரம் தவருது நடைபெற்று வருகின்றது. இம்மூடக்கொள்கையை நிறுத்த

வேண்டுமென்று பல பெரியார்கள் முயன்றனர். அவர்கள் முயற்சி வீண்போகவில்லை. கோயில் சூழலிலுள்ள பலர் பலி கொடுப்பதை நிறுத்தியுள்ளார்கள். வாலிபர் பலர் முன் வந்து இந்த ஆண்டிலாவது அதனை முற்றாக நிறுத்த வேண்டு மென்று முயற்சிகள் செய்கின்றனர். அவர்கள் முயற்சி வெற்றி அடைய வேண்டுமென்று எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

கடந்த 12 ஆண்டுகளாக இக்கோயிலில் இருந்து பஜனைக் கோஷ்டி ஒன்று நல்லூர்த் தேர்த்திருவிழா அன்று நல்லூருக்குப் பஜனைப்பாதயாத்திரை செய்து வருகின்றது. புறப்படும்போது நூற்றுக்கணக்கானவர்கள் மாத்திரம் என்றாலும் கோயில் சேரும்போது ஆயிரக்கணக்கான பக்தர்கள் கூடிவிடுகின்றனர்.

கோயிலோடு சம்பந்தமான பெயரைப் பெற்றமையினாலே ஏழாலை சிறந்து விளங்குவதுபோல பக்தி உள்ளம் பூண்டமையினாலே அங்குள்ள மக்களும் பண்பாட்டுடன் விளங்குகின்றார்கள்.

**ஈழத்திலும், இந்தியாவிலும் கோயில்களைப் புனருத்தாரணம் செய்வதில் தற்போது ஒரு ஆர்வம் காணப்படுகிறது. அந்த முறையில் ஏழாலையிலுள்ள ஆலயங்களும் புனருத்தாரணத்தைப் பெறும் அதே வேளை ஏழாலையில் புதிய தேர் ஒன்று நிர்மாணிக்கப் பெற்று 4-6-71 வெள்ளிக்கிழமை வெள்ளோட்டம் நிகழ இருக்கிறது. இத்தேரின் சிற்பக்கலையின் ஒரு பகுதியே இம்மாதச் சோதியின் முகப்பை அலங்கரிக்கிறது.**

## ஏழாலை பெரியதம்பிரான் கோவில்

# அற்புதங்கள்

(நா. முத்தையா)

ஆண்டவன் மனிதனைப் படைத்தான். மனிதன் ஆண்டவனைப் படைக்கிறான் என்று பெரியவர் ஒருவர் கூறினார். இதை ஆழ்ந்து சிந்தித்தால் பெரியதொரு உண்மை புலப்படும். ஒருகோயிலுக்கு மகிமையை ஏற்படுத்துபவர்கள் அதனை வணங்கும் பக்தர்களே.

ஏழாலையிலுள்ள ஏழு ஆலயங்களுள் பெரியதம்பிரான் ஆலயமும் ஒன்றாகும். அங்குப் பல அற்புதங்கள் நிகழ்ந்தன. அங்ஙனம் நிகழ்ந்ததற்குரிய சான்றுகள் இன்றும் இருக்கின்றன. அவற்றுள் முக்கியமானவை எட்டு. இவற்றை அட்ட அற்புதங்கள் என்று கூறுவர்.

1. அனுராசபுரத்திலிருந்து படிமாத்தான் ஆகாய மார்க்கமாக வந்து இங்கு செய்த பல அற்புதங்கள்.
2. இறந்துகிடந்த யானையை ஏழாவது நாள் உயிர்பெற்றெழுந்து போகச்செய்தது.
3. கண் தெரியாது குருடனாயிருந்த கீழக்கரைச் சோனக மரக்காயருக்குத் திரும்பவும் பார்வை உண்டாக்கியது.
4. கோவிலுக்குப் பக்கத்தில் நின்ற பெண்பனையை ஆண் பனை ஆக்கியது.
5. கற்கோவளத்தில் மீன்பிடிகாரருக்குச் செய்த சில அற்புதங்கள்.
6. வடலிப்பனையை ஈச்சமரம் ஆக்கியது.
7. வாசஸ்தானத்தை நிந்தித்துப் பேசிய மாவிட்டபுரத்தானுக்குப் பாம்புகடிக்கச் செய்ததும், பின் அவனுக்குச் சுகம் கொடுத்ததும்.
8. நாவற்கனியில் கொட்டை இல்லாது போகச் செய்தது,

ஏழாலையில் மருத்தனுவுடையார் பெரிய செல்வந்தர். அவரது மகன் கெங்கையர். இவரது காலத்தில் பரம்பரையாக வந்த செல்வம், செல்வேம் செல்வேம் என்றே மறைந்து விட்டது. கெங்கையர் வறுமையால் வாடினார். வறுமைகாரணமாக ஊரில் இருக்க அஞ்சி தாயாருடன் அநுராசபுரம் சென்று அங்கு வசித்து வந்தார். இவர்கள் குடும்பம் பரம்பரையாகப் பெரியதம்பிரான் கோயிலில் பக்தி செலுத்திவந்த குடும்பம். இவர்கள் குலதெய்வமே பெரியதம்பிரான்தான்.

ஒருநாள் இரவு கெங்கையர் அருமையான ஒரு கனவு கண்டார். சோதி உருவம் உடைய ஒருவர் 'இன்று பெரிய தம்பிரான் கோயிலில் பொங்கல் உடனே வா' என்று அழைத்தார். உருவம் மறைந்ததும் துடிதுடித்து எழுந்தார் கெங்கையர். தாயை எழுப்பினார். ஆச்சி! விடிய பெரியதம்பிரான் கோயில் பொங்கல், நீயும் வா இருவரும் போய்வருவோம் என்றார். அநுராசபுரத்திலிருந்து யாழ்ப்பாணம் 120 மைல் தூரம். எப்படிச் செல்வதென்ற எண்ணமே எழவில்லை. அந்தக்காலத்தில் புகையிரதமோ, மோட்டார் வண்டியோ, பஸ்வண்டியோ கிடையாது. தாயாரும் இதைப்பற்றிச் சிந்திக்கவில்லை. நாங்கள் வறுமையினால் வாடி தேசாந்திரிகளாகப் பறப்பட்டோம். ஆனபடியினால் திரும்பி அந்த ஊருக்குச் செல்ல நான் விரும்பவில்லை என்று தாயார் மறுமொழி கூறினார்.

சரி அப்படியானால் நீங்கள் இங்கே இருங்கள். நான் சென்று வருகிறேன் என்று புறப்பட்டார் கெங்கையர். அவரை அறியாத ஒரு ஆவேசம் உண்டானது. பெரிய இடி முழக்கத்தோடும் மின்னலை ஒத்த வெளிச்சத்தோடும் ஆகாயமார்க்கமாக வந்து பெரியதம்பிரான் கோயிலில்வந்து இறங்கினார். மக்கள் ஆயிரக்கணக்கில்கூடிப் பொங்கல் நடத்திக்கொண்டிருக்கிறார்கள். பேரொளிப்பிளம்போடும் இடி முழக்கத்தோடும் ஒருவர் வந்து தலமத்தியில் இறங்கித் திரு

நடனமிடுவதைத் தமது ஊனக்கண்களாற் கண்டு களித்தனர். அங்கங்கு பரந்து நின்ற சனக்கூட்டம் அவரைச் சூழ ஒன்று கூடியது.

இவர் யார்? என்ற கேள்வியே எல்லார் உள்ளத்திலும் எழுந்தது. உடையோ அழுக்குநிறைந்த கந்தல் உடை. உள்ளமோ குறைவு இலா நிறைவு பெற்ற பூரண உள்ளம். அங்குள்ள பெரியவர்கள் சிலர் ஒன்றுகூடி அவரையே யார் என்று கேட்பதாக முடிவு செய்தார்கள். வயதில் முதிர்ந்த பெரியவர் ஒருவர் 'சுவாமி தாங்கள் யாரென்று நாம் அறிய விரும்புகிறோம்' என்று கேட்டார். 'நான்தான் பெரியவன்' என விடைகிடைத்தது.

அங்கிருந்து மேற்குத்திசையாக $\frac{1}{4}$ மைல் தூரத்தில் 'சாடியடி' என்றொரு இடம் உண்டு. அங்கும் சென்று திருநடனம் ஆடினார்.

சுன்னாகத்தில் சிதம்பரநாதர் என்றொரு பிரபல மந்திரவாதி வசித்து வந்தார். கெங்கையருடைய ஆகாய வருகையையும் அற்புதக்காட்சியையும் அற்புதத் திருநடனத்தையும் ஆவேசத்தையும் கேள்வியுற்றார். தன்னைவிட மந்திரவாதி ஒருவன் தலைகாட்டுவதா என்ற எண்ணம். இதோ அந்த ஆவேசத்தை அடக்குகிறேன் என்று கூறிக்கொண்டு புறப்பட்டார் சிதம்பரநாதர். சில மந்திரங்களை உச்சாடணம் செய்து கொண்டு கையில் ஒரு எலுமிச்சம் பழத்துடன் கோயிலுக்குப்பக்கத்தில் உள்ள நெடுங்கண்ணி என்ற காணிக்குள் தனது பரிவாரங்களுடன் வந்திருந்தார் சிதம்பரநாதர்.

இத்தருணத்தில் சாடியடியில் இருந்து மடைப்பண்டம் முதலியவற்றோடும் மேளவாத்தியகோஷத்தோடும் படிமாத்தான் திருநடனம் ஆடிக்கொண்டு வந்தார். ஆவேசம் வந்து சாமி ஆடுபவர்களை படிமாத்தான் என்று அழைப்பது அக்கால வழக்கு. சிதம்பரநாதர் சாஷ்டாங்க நமஸ்காரம் செய்து படிமாத்தானிடம் தான் வைத்திருந்த எலுமிச்சம்

பழத்தைக்கொடுத்தார். அத்தருணம் படிமாத்தான் அதனைப் பெற்றுக்கொள்ளாது தமது கையிலிருந்த பிரம்பால் தட்டிவிட அது நிலத்தில் விழாது ஆகாயமார்க்கமாகச் சென்று மறைந்தது. சிதம்பரநாதர் தனது மந்திரவித்தை பலிக்காதது கண்டு மனவிசனமுற்று நின்ருர். படிமாத்தான் திருநடனம் ஆடியபடியே கோயிலை அடைந்தார். அங்கே ஆயிரக்கணக்கில் மடைகள் பரப்பப்பட்டிருந்தன. எம்மடையிலும் கால் படாதவாறு மடைகளுக்குள் புகுந்து புகுந்து திருநடனம் ஆடினுர். அங்குள்ள மடைகளில் எலுமிச்சம்பழம் வைக்கப்படாதிருந்ததைக் கண்ணுற்று பூசாரியை விழித்து ஏன் எலுமிச்சம்பழம் வைக்கப்படவில்லை என்று ஆவேசத்துடன் கேட்டார். பூசாரி பயந்து நடுங்கி ஒடுங்கி வணங்கிச் சுவாமி எலுமிச்சம்பழம் கிடைக்கவில்லை என்ருர்.

உடனே படிமாத்தான் ஆவேச வசத்தராகி தனக்குப் பின்னுல் வருமாறு பூசாரிக்குச் சைகை காட்டினுர். இருவரும் பக்கத்தில் உள்ள மரங்கள் நிறைந்த காட்டினுள்ளே புகுந்தனர். ஒரு மரத்தின் அடியில் வெள்ளை விரிக்கச்செய்து அம்மரத்தை ஆட்டினுர். அம்மரத்திலிருந்து எலுமிச்சம் பழங்கள் விழுந்தன. பூசாரி அம்மரத்திற்கு அடையாளம் கட்டிவிட்டு பழங்களைப் பொறுக்கிக்கொண்டு வந்து மடைக்குப் படைத்தார். அடுத்தநாட்காலை பலர் ஒன்று சேர்ந்து போய் அது என்ன மரம் என்று பார்த்தனர். பூசாரி அடையாளம் கட்டிய மரம் பிராய் மரமாக இருந்தது,

படிமாத்தானுடைய கேள்விப்படி 'நாயகவழுந்து' வைத்திருந்த இடத்தில் பெரியதீவறை மூட்டப்பட்டது. பிறகு கொழுந்துவிட்டெரியும் போதே படிமாத்தான் அதன் மீது திருநடனம் ஆடினுர். சிதம்பரநாதர் தலைப்பாகையுடன் முன் வரிசையில் நின்ருர். அவரது தலைப்பாகையைப் பிரம்பினுல் எடுத்து கொழுந்து விட்டெரியும் நெருப்பிலே போட்டார். அது எரிந்து சாம்பரானது. சிதம்பரநாதர் மரம்போலத் திகைத்துநின்ருர்.

படிமாத்தான் ஏக்கத்தோடு நின்ற சிதம்பரநாதரைத் தன்முன்வருமாறு அழைத்தார். சிதம்பரநாதர் பயபக்தியோடு அவர் முன்னிலையில் சென்று சிரம்தாழ்த்தி நின்ருர். 'நீ என்னைத் தடுக்கும் பொருட்டு எலுமிச்சம்பழத்தில் மந்திரித்துக்கொண்டு வந்தாய் அல்லவா? அந்த எலுமிச்சம் பழத்தை இப்போது வரவழைப்பாயா?

'சுவாமீ அது என்னுல் முடியாத காரியம்'
'உமது இருகைகளையும் ஏந்தியவண்ணம் நிற்பீராக!'
'நீர் கொண்டுவந்த பழம் இதுதாஞ?'
ஆம் சுவாமி இதே பழம்தான்.
உமது தலைப்பாகை எரிந்துவிட்டது அதனை எடுப்பீராக?
அடியேனுக்கு அது முடியாது சுவாமி.

அப்போது சுவாமி பூசாரியை அழைத்து மடையிலிருக்கும் தீர்த்தத்தை எடுத்துவந்து நெருப்பின் மீது தெளிக்குமாறு கட்டளையிட்டார். பின்பு சுவாமி திருநடனமாடி தமது கையிலிருந்த பிரம்பினுல் தலைப்பாகையை எடுத்துச் சிதம்பரநாதர் தலைமீது வைத்தார். உடனே சிதம்பரநாதர் சுவாமிகளின் பாதங்களில் அடியற்ற மரம்போல விழுந்து நமஸ்கரித்து முகமெலாங் கண்ணீர்வார எழுந்து நின்று 'சுவாமீ அடியேன் அறியாது செய்த பிழைகள் அத்தனையையும் மன்னித்து அடியேன் தங்களை நினைந்து வணங்குவதற்கு அருள்புரியவேண்டும்' என்று இரந்துநின்ருர்.

உடனே சுவாமி மனமிரங்கி ஒரு எலுமிச்சம்பழத்தையும் ஒரு பிரம்பையும் எடுத்து அவரது வீட்டை நோக்கி எறிந்து, அவரைப்பார்த்து இவை உமது வீட்டின் வலப்பாகத்திற் போய் கிடக்கின்றன. அவ்விடத்தில் நின்று நீ என்னை நினைத்து வேண்டிய வரங்களைப் பெற்றுக்கொள் என்ருர். கோயிலிருப்பது ஏழாலை. கனி, தடி சென்றிருப்பது சுன்னுகம். இரு இடங்களுக்கும் இடைத்தூரம் குறைந்தது 2 மைல் இருக்கும். இந்த அதிசயத்தைப் பார்க்க அங்குள்ள முதியவர்களிற் சிலர் ஒன்றுகூடி ஊர்த்தலைமைக்காரரையும் அழைத்துக்கொண்டு சிதம்பரநாதருடைய வீடு

சென்று பார்த்தனர். சுவாமிகள் குறிப்பிட்ட இடத்திலே அவை இரண்டும் இருக்கக்கண்டு அதிசயித்து நின்றனர். சிதம்பரநாதர் இவ்வற்புதத்தைக் கண்ணுற்றபின் திரும்பி வந்து சுவாமியை நமஸ்கரித்துச் சென்று அன்று தொடக்கம் பூசை செய்து வந்தார். அவரிறந்த பின்பும் அவருடைய சுற்றத்தாரால் அப்பிரம்பு பூசை செய்யப்பட்டுவருகிறது.

இவ்வதிசயத்தை நேரில் அனுபவித்த ஊர் அதிகாரி இவ்வாறு தமக்கும் அனுக்கிரகம் புரிய வேண்டும் என்று ஓட்டமாய் ஓடிவந்து படிமாத்தானைக் கும்பிட்டார். படிமாத்தான் இது உனக்குத் தகாததென்று பிரம்பாலடித்து அவரைத் துரத்திவிட்டார். அவமானம் அடைந்த இவ்வதிகாரி மிகுந்த கோபம் உடையவராய் படிமாத்தானை மறியற்படுத்துமாறு கோட்டில் வழக்கு வைத்தார். மறுநாள் படிமாத்தானுக்குக் கட்டளை வந்தது. இவர், கட்டளைப் பிரகாரம் கோட்டுக்குப் போகும் போது ஸ்நானம் பண்ணி ஈரவஸ்திரம் தரித்து முக்காடிட்டுக்கொண்டு போனார். அத்தருணம் நீதவான் இவரைக் கூப்பிட்டார். இவர் போய்க் கூட்டில் ஏறினார். நீதிபதி நிமிர்ந்து பார்த்தார். தலையிலுள்ள முக்காட்டை நீக்குமாறு கூறினார். இவர் ஒன்றும் பேசாது நின்றார். நீதிபதி சேவகனைப் பார்த்துக் கோபத்துடன் அவன் தலையிலுள்ள சீலையை எடு என்றார். அந்தச் சீலையை சேவகன் எடுத்த உடனே அவருடைய ஒரு தோளில் நாகமும், மறு தோளில் நாவியும் இருந்தன. இதைக் கண்ட நீதிபதி மனக்கிலேசமுற்று இருக்கையில், வழக்காளியான தலைமைக்காரன் பார்த்தீர்களா? இவன் பேய்வித்தைக்காரன் என்றார்.

உடனே நீதவான், ஓ படிமாத்தானே, நீ உண்மையுள்ள தெய்வமாயின் இச்சபையில் நான் சொல்லுகிறபடி செய்வாயா? என்றார். படிமாத்தான் ஆம் என்றார். நாம் இரும்பை வேக வைப்பித்து நெருப்பாய்த்தர அதை உனது கையினால் முறுக்கிப் புளிவாயோ? என்றார். இவர் அதற்

கும் ஆம் என விடை அளித்தார். நீதவானுடைய கட்டளைப்படி நெருப்பில் நன்கு வெந்த இரும்புத்துண்டு ஒன்றைக் கொண்டுவந்து கொடுத்தனர். இவர் தமது கையால் வாங்கி முறுக்கிப் பிளிந்தபோது நெருப்புநிறமான தண்ணீர்த் தவலைகள் கீழே விழுந்தன. இதைக் கண்ட நீதிபதி இவரைப்பார்த்து நீ உண்மையான தெய்வம்தான். நானும் உமக்குப்பல வெகுமதிகள் தருகிறேன் என்று கூறிப் பொருளும் கொடுத்து தனக்காகப் பூசை பொங்கல் இட வேண்டும் என்றும் வேண்டிக் கொண்டார். பரிசுகளைப் பெற்று வரும்போது முறுக்கிப் பிளிந்த அலவாங்கையும் கொண்டுவந்து சேர்த்தார். சாடியடியில் இன்றும் அந்த அலவாங்கைக் காணலாம்.

## நட்பு.

செம்படவன் வலையை வீசி மீன்களைப் பிடிக்கிறான். தண்ணீரோ மீனின் பற்றை விட்டு தன் போக்கில் கவலையின்றி ஓடிக் கொண்டிருக்கிறது. ஆனால் மீன் தண்ணீரின் நட்பை விடுவதில்லை. தண்ணீரை விட்டுத் தனியானதும் உயிரை விட்டு விடுகின்றது. இதுவே உண்மையான நட்பு

-நஹீம்.

நட்புக் கொள்ளும் விஷயத்தில் அவசரப் படாதீர்கள். நிதானமாக இருங்கள். நட்புக் கொண்டபின் நிலைத்து நிற்க வழி தேடுங்கள்.

-சாக்ரட்டீஸ்.

அண்டிக் கெடுக்கும் தோழனை விட, தூரத்திலிருந்து நம்மை அழிக்க முனையும் பகைவன் ஓரளவு உயர்ந்தவனே!

-ஓர் அறிஞர்.

# ஏழாலை அம்பலவாணேஸ்வரர் ஆலயமும் தேர்த்திருப்பணியும்

வித்துவான்:- திரு. மு. கந்தையா பி. ஏ. அவர்கள்

யாழ்ப்பாணத்துப் புராதனப் பெருமை பெற்ற பதிகளுள் ஒன்று ஏழாலை. யாழ். வலி வடக்கில் மல்லாகத்திற்கும் புன்னாலைக்கட்டுவனுக்கும் இடையில் உள்ளது இப்பதி. யாழ்ப்பாண தமிழரசர் காலத்தில் இருந்தே சைவத் தமிழ்க் கலாசாரத்தில் உறுதி பூண்ட தமிழ்க் குடிகள் இங்கு வாழ்ந்து வந்துள்ளன. போத்துக்கீச, ஒல்லாந்த ஆட்சிக் கெடுபிடிகளினால் கலாசாரத் தலை தடுமாற்றங்களுக்கு அசைந்து கொடுக்காத அளவுக்கு அவர்களிடம் சொந்தக் கலாசாரப் பற்றும் உறுதியும் ஏற்பட்டிருந்ததாக தெரிகிறது. தமது சைவத் தமிழ்க் கலாசார அழுத்தத்திற்கிணங்க அவர்கள் மேம்பாடான முறையில் வழிபட்டு வந்த பிரசித்தமான ஏழு சைவாலயங்கள் இப்பதியில் இருந்துள்ளன. அது பற்றி ஊருக்கு ஏற்பட்ட 'ஏழாலயம்' என்ற பெயரே காலகதியில் மருவி 'ஏழாலை' என வழங்கலாயிற்று. மற்றெக் காரணமும் நோக்காது ஆலயங்களையே காரணமாகக் கொண்டு ஊர்ப் பெயர் ஏற்பட்ட அமைதியை நோக்கும் போது அவ்வாலயங்களேழும் தனிப்பட்ட முறையான ஒரு வகையுயர்வும் பிரசித்தியும் பெற்றவையாய் இருந்திருக்கின்றன என்னும் உண்மை புலனாகும். இந்த உண்மைக்கு இன்னும் கண் கண்ட காட்சிகளாய் இலங்கிக் கொண்டிருப்பது குறித்த ஏழாலயங்களில் ஒன்றெனை ஐயத்திற்கிடமின்றித் தெளியப்பட்ட பெரியதம்பிரான் கோயில். இது ஊர் மத்தியில் பரந்தகன்ற பெரிய வயல் வெளியில் ஒரு பக்கத்திலே விளங்கும் நீராழியான பெருங்குளமொன்றின் ஓரத்தில் காலங்கண்ட பழைய மருதமரச் சோலையின் மத்தியில் உளதாகும். இம் மருதமரப் பழைமையும் பெரியதம்பிரான் கோயிற்புதுமையும் என்றும் பிரசித்தமானவை. இன்றும் பார்த்துணரக்கிடப்பவை.

இங்ஙனம் அமைந்திருந்த தனது சைவத் தமிழ்க் கலாசார மேன்மைக்கேற்ப இவ்வூர் பிரசித்தி பெற்ற சான்றோர் பலரின் தொடர்பும் பெற்றுள்ளது. காசிவாசி, சிவ ஸ்ரீ செந்திநாதையர் அவர்கள் பாரத நாடு முழுவதிலும் புகழ் பெற்றவர்கள். அவர் பெற்றிருந்த வேதாகம சைவ ஞான மேன்மை வியக்கற்பாலது. ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் அவர்களின் நன் மாணுக்கர் என்ற மேன்மைக்குரியவர் அவர். அவர் தம் ஜன்மபூமியும் இவ்வேழாலையே. ராவ்பஹதூர் சி. வை. தாமோதரம் பிள்ளையவர்கள் தமிழ் நாடு முழுவது மறிந்த ஒரு தமிழறிஞரும், தமிழ்ப் புரவலருமாவர். அவர் தம் ஜன்மபூமியும் இவ்வேழாலையே. தமது தாய்ப் பூமியாக இதனை உளங்கொண்டு அவர் அக்காலத்தில் இங்கு உயர் தமிழ்க் கலாசாலையொன்று நிறுவித் தமது சொந்தச் செலவில் 22 வருட காலம் அக்கலாசாலையை நடத்தியுள்ளார். சுன்னுகம் முருகேச பண்டிதர் ஸ்ரீமத். அ. குமாரசுவாமிப் புலவர் என்போர் இக்கல்லூரியில் தலைமையாசிரியர்களாகப்பணிபுரிந்துள்ளனர். குமாரசுவாமிப் புலவர் தலைமை இருபது வருடங்களாகநீடித்திருக்கின்றது. இவ்வித்தியாசாலை நடைமுறைகளையும் பெறுபேறுகளையும் பற்றிய விபரங்கள் வருடா வருடம் அதனைப் பரிசோதனை செய்தோர் அறிக்கைகள் மூலம் தெளிவாகும். முதல் வருடப் பரிசோதகர் ஸ்ரீலஸ்ரீ. ஆறுமுக நாவலர். இரண்டாவது வருடப் பரிசோதகர்; வித்துவசிரோமணி பொன்னம்பலபிள்ளை; மூன்றாவது வருடப்பரிசோதகர், கொக்குவில் சபாரத்தின முதலியார். இவர்களது பரிசோதனை அறிக்கைகளும் பாடசாலை சம்பந்தமாக குமாரசுவாமிப் புலவர்க்கும், ஸ்ரீமான் தாமோதரம் பிள்ளைக்குமிடையிலிருந்த கடிதத் தொடர்புகளும் சமீபத்தில் வெளியாகியுள்ள குமாரசுவாமிப்புலவர் சரித்திரத்தின் மூலம் அறியப்படும்.

சைவ ஞான அநுபூதிச் செல்வராகிய ஸ்ரீமத் சடைவரத சுவாமிகள் யாழ்ப்பாணத்துக் கடையிற் சுவாமிகளின் ஞான பரம்பரையில் உதித்தவர். அவர்கள் தமது ஆரம்ப காலத்திலேயே இவ்வூரிலுள்ள ஆத்மநேயச் செல்வர்களின் நன்மதிப்பையும் சேவையையும் பெற்று இவ்வூரில் தங்கிச்

சாது சங்கம் கூட்டித் தகுதியான ஒரு மடாலயமும் அமைத்துள்ளார்கள். அம்மடாலயம் இன்று. 'சமயாசாரிய சுவாமிகள் ஆதீன மடம்' என்ற பெயரில் விளங்கிச் சமயாசாரியர் நால்வரையும் சதா வழிபட வைத்துச் சைவஞான உணர்வு கொளுத்தி வருகின்றது. அவர் தம் ஞான வழித் தோன்றல்களாகிய அருளானந்த சிவம் முதலியோரின் உருவும் திருவும் இவ்வூர் மக்களின் சைவத் தமிழ்க் கலாசாரப் பற்றுக்கு மென்மேலும் ஊக்கமளித்து வந்து கொண்டிருக்கின்றன.

## அம்பலவாணேஸ்வரர் ஆலயம்:-

மேற்குறிப்பிட்ட பெரியதம்பிரான் ஆலயத்துக்கும் தாமோதரம்பிள்ளை வித்தியாசாலை இருந்த இடத்துக்கும் இடையிலே ஒன்றை யொன்று மருவி யெழுந்து ஒரே புற வீதிக்குள் அமையும் சைவக் கோயில்கள் நான்குள்ளன. இக்கோயில்கள் நான்கும் இவ்வூர் பெருமக்கள் ஆன்மார்த்தமாகப் பூசித்த மூர்த்திகளை மூலலிங்கங்களாகக் கொண்டெழுந்தவை. காலத்தால் நாவலர்பெருமான் மறுமலர்ச்சிக்காலத்துக்கும் முற்பட்டவை. என்றும் வேதாகம விதிப்பிரகாரம் இயன்று வருபவை. முறையே சிவன், அம்மன், விநாயகர், சுப்பிரமணியர் கோயில்களாக அமைந்தவை. இவற்றுள் தோற்றத்தில் முந்தியது அம்மன் கோயில். கோயில் அம்சங்கள் எல்லாம் நிறைவேற்றிக் கொடியேறித் திருவிழாக் கொள்ளும் நிலைக்கு இற்றைக்கு எழுபது ஆண்டுகளுக்கு முன்னமே முன்னேற்றங்கண்டுள்ளது விநாயகர் கோயில். தாமோதரம்பிள்ளை வித்தியாசாலைக் காலமும், இக்கோயிலின் உன்னத காலமும் சமகாலமெனலாம். ஆனுல், காலமாற்றத்தினுல் இவ்வாலயத்தின் உன்னதநிலை பிறகு மந்தமடைந்து மீளவும் தனது பழைய உன்னதநிலையைப் பற்றும் வகையில் தற்போது கால்கொண்டெழுகின்றது. (முருகமூர்த்தி) சுப்பிரமணியர் கோயிலும் இரட்டைப் பஞ்சாங்கமுறையான சிற்பாலங்காரக் கட்டடமெனப்

புப் பெற்றுத் தன் உன்னத நிலையை நாடிநிற்கின்றது. அம்மன் கோயிலும் இவ்வகையில் முன்னேறி வருகின்றது. இவ்வம்மன் கோயிலின் வலது புறத்தில் உள்ள சிவன்கோயிலே அம்பலவாணேஸ்வரர் ஆலயம் எனப்படுவது. இவ்வாலயம் இற்றைக்கு ஏறக்குறைய 120 ஆண்டுகளுக்கும் முன் தாபிக்கப்பட்டதென்பர். இவ்வாலயத்தின் நிலையும் காலகதியில் மெல்ல மெல்ல முன்னேறித் தற்பொழுது பரிவார மூர்த்திகளுக்குரிய சகல ஆலயங்களும் அமைந்து ஓரளவுக்குப் பூரணத்துவ நிலையெய்தித் திருவருட் சிறப்பினால் தற்பொழுது கொடியேறி உற்சவம் நிகழ்ந்து தேர் தீர்த்தச் சிறப்புங் காணத்தக்க அளவிற்கு வளர்ச்சி பெற்றிருக்கின்றது.

## தேர்த்திருப்பணி:-

இன்று நிகழ்வது நாவலர் நூற்றாண்டு யுகம். இக்காலப் பகுதியில் பொதுவாக எல்லா ஊர்களிலும் சைவப்புத்துணர்ச்சியும், எழுச்சியும் தலைதூக்கி வருகின்றன. அவ்வெழுச்சி அலையின் ஒரு அம்சமாகப் போலும் ஏழாலை அம்பலவாணேஸ்வரர்க்குச் சித்திரத்தேர் ஒன்று அமைக்கும் ஆர்வம் தலைதூக்கிற்று. அதன் விளைவாகக் கடந்த 19-8-68–இல் தேர்த்திருப்பணிச்சபை யொன்று அமைக்கப் படலாயிற்று. இவ்வூர் அறிஞர்கள், அன்பர்கள், அபிமானிகள் அனைவரையும் அங்கத்தவர்களாகக் கொண்ட இச்சபை மிகக் கட்டுக்கோப்பான முறையில் செயலாற்றிப் பொன்னும் பொருளுந்தேடி மிகக்குறைந்த கால எல்லையிலே அதாவது 24–1–69 இலேயே நாள் வேலை ஆரம்பித்து விட்டது. ஏழாலையைப் பிறப்பிடமாகக் கொண்டு தற்பொழுது நீர்வேலியில் வசிக்கும் செல்வரத்தினம் ஆசாரியாரால் தேர் வேலைகள் நிர்வகித்து நடத்தப்பட்டு வருகின்றன. அடியிலிருந்து முடிவரையில் சித்திர வேலைப்பாடுகள் அமைந்த கவர்ச்சிகரமான தேராக இது நிறைவேறத் திருவருள் துணைபுரிந்திருக்கின்றது. தம் கஷ்டங்களைப் பெரிது படுத்தாது தேருக்குப் பணம் என்றவுடனே 'இதைப் பெற்

றுக் கொள்ளுங்கள் இன்னுந்தரலாம்' என மனமுவந்தளித்த உள்ளூர் அன்பர்கள், வெளியூர் அன்பர்கள் அனைவரினதும் நல்லெண்ணமே இதனை இத்தனை விரைவில் இத்தகைய சித்திரத் தேராக அமைத்து வைத்திருக்கிறது என்றல் மிகையாகாது.

சகல அம்சங்களும் நிரம்பிய பூரணப்பொலிவுடன் இவ் வைகாசி மீ 21ஆந் திகதி (4-6-71) இத்திருத்தேர் வெள்ளோட்டவிழா இனிது நடைபெறத் திருவருள் பாலித்துள்ளது. தோன்றாத் துணையாய் நின்று திருப்பணிச்சபையை வழிநடத்தித் தேர்த்திருப்பணியை நிறைவேற்றி அதன் நிறைவுகண்டு சைவவுலகம் விழாக்கொண்டாடி மகிழ வைத்த திருவருளுக்கு என்றென்றுங் கடப்பாடுடையோம்.

'மேன்மைகொள் சைவநீதி
விளங்குக உலகமெல்லாம்'

## அடக்கம்.

பணிவுடையவர்களாக வாழ்தல் பொதுவாக எல்லோருக்கும் நல்லதாகும். செல்வர்களுக்கு அப்பணிவு மற்றொரு செல்வம் போன்றதாகும். —திருவள்ளுவர்.

சமுதாயத்தைப் பின் பற்றி மனிதன் அடக்கமாகப் பணியாற்ற வேண்டும். —காந்தியடிகள்.

ஒரு இரகசியத்தை இரகசியமாக வைத்திருக்க வழி, அது இரகசியமான விஷயம் என்பதை இரகசியமாக வைத்திருப்பது தான். —ஹென்றி கெயிலர்,

எந்தச் சந்தர்ப்பத்திலும் மனம்போனபடி விட்டுவிடாமல், பேச்சிலும் காரியத்திலும், அடக்கம் இருக்கவேண்டும். எவ்வளவு கல்வியும் செல்வமும் இருந்தாலும் அடக்கம் இல்லாவிடின் பண்பாடு என்பது இல்லை.

—ராஜாஜி.

# இயற்கையே சோதிடம்

(ச. இ. அப்புத்துரை சோதிடன் - வெள்ளவத்தை)

## பாடம்: 13

வானசாஸ்திரம், பிமாண்டம், சூக்குமம் பிரமாண்டம் இயற்கை (மாயை) பிரபஞ்சம் முதலிய அகில சராசரங் களின் இயற்கைத் தத்துவத்தை ஆய்ந்து அறிதலே வான சாஸ்திரமாகும்.

பிரமன் மேதினி படைத்தோன். பிதாமகன் பிதாவி தாதா இரணியகருப்பன் போதன். இனிய மாலுந்தி வந் தோன். அன்னவாகனன். நாமகள் தலைவன் முதலிய பல நாமங்கள் படைப்புத் தொழிலையுடைய பிரம்மனுக்குண்டு.

உலகிலேயே மக்களுக்கு அறிவை வளர்க்கக்கூடிய சாஸ் திரம் வானசாஸ்திரமாகும். தத்துவசாஸ்திரம், விஞ்ஞான சாஸ்திரம், கணிதசாஸ்திரம், சோதிடசாஸ்திரம், பூமி சாஸ்திரம், மாலுமிசாஸ்திரம், சிற்பசாஸ்திரம் முதலிய பல பிரிவுகளை ஒன்ருக அடக்கி அவற்றின் புறநடையை உணர்த்தும் தலையாய சாஸ்திரம் வானசாஸ்திரமாகும்.

பூமியின் ஆதி எங்கே, (ஆதிதாளம்) அந்தமெங்கே. எங்கள் கண்களுக்குத் தோற்றப்படும் நட்சத்திரங்கள் யா வை? இப்பூமி எவ்விதந் தோன்றியது? நாம் எவ்விதம் பூமி யிற்ருேன்றினேம்? நாம் இறந்தால் எங்கு செல்வோம்? மோட்ஷம், நரகம் எந்த உலகத்திலிருக்கின்றன. சிவம், சக்தி என்னும் மூலப்பொருள்கள் எவை? வளர்ச்சி கவர்ச்சி முதலியன யாவை? பூமி, சந்திரன், சூரியாதி கிரகங்களும் நட்சத்திரங்கள், ராசிமண்டல முதலிய பிரகிருதிகள் எப் படி இயங்குகின்றன? மறுபிறப்புகளுமுண்டோ? என்ற கேள்விகட்குப் பதிலளிக்கக்கூடிய அறிவை இவ்வான நூலைக்

கற்றுணர்ந்தோர் இலகுவிலடைவார்கள். இந்நூல் பன்னிரண்டத்தியாயங்களில் வெளிவரும் எனலாம்.

பிரமாண்டம் (இயற்கை, மாயை) ஒரு குறிப்பிட்ட காலத்தில் தொடங்கினதன்று. அது அனுதி என்பது இந்து மதக்கொள்கை. அது மாறி மாறி ஒழுங்காகத் தோன்றியும் மறைந்தும் வந்துகொண்டிருக்கின்றது. அது உண்டாகிறது சிறிது காலம் இருக்கின்றது. பின்பு மறைந்துவிடுகின்றது, இம்மூன்று நிலைகளும் சிருஷ்டி (தோற்றம்) ஸ்திதி (இருப்பு) பிரளயம் (ஒடுக்கம்) என முறையே பெயர் பெறும். இம் மூன்று செயல்களும் நித்தியமாக மாறி மாறி நிகழ்கிறது. முதற் கூறியதைப் போன்ற ஒரு நிகழ்ச்சி நம்மனைவராலும் ஏறக்குறைய நித்தமும் அனுபவிக்கப்பட்டு வருகின்றது. நாம் விழிப்பு, உறக்கம் எனும் நிலைகள் வழியாகச் செல்லும் போது, பிரம்மாண்டம் மாறி மாறி தோன்றவும், மறையவும் செய்கிறது. சுழுத்தியில் (ஆழ்ந்த உறக்கத்தில்) தனி மனிதன் ஒருவனது மனதிற்கு அது இல்லாதது ஒழிகிறது. இதுவும் பிரளயம் எனப்படும். ஆனுல் உறங்கும் நிலையிலுள்ள மனிதனின் உணர்வால் இது வரையறுக்கப்பட்டிருப்பது கருதத்தக்கது. உறக்கத்தில் நிகழும் இந்த தற்காலிக ஒடுக்கம் நித்திரை எனப்படும்.

இனி படைப்புக்குட்பட்ட தனி மனிதர்கள் அனைவரும் ஒ[illegible] சமயம் உறங்கிவிடுவார்களாயின் என்ன நிகழும்? என் [illegible]க் கவனிப்போம். அப்போது ஒருவரும் உலகினைப் பற்றிய உணர்ச்சியை உடையவராகார்; அது முற்றும் இல்லா தொழியும். அத்தகைய நிகழ்ச்சி உண்மையாகவே நிகழ்கிறது. (இத்தத்துவத்தை) இந்து மதம் கருதுகிறது. எல்லா மனங்களின் தொகுதியே அண்டமுழுவதும் பரந்தமனமாகும். இம்மனம் ஓர் தேவதைக்குரியது. இத்தேவதையே எல்லையற்ற சக்தியோடு முதல் முதலாக புருடராவர். அவரை இரணியகருப்பர், ஸூத்திராத்மா, அபரப்பிரம்மன், மஹத்பிரம்மன் பிராணன் [illegible]ன்னும் பல பெயர்களால் உபநிடதங்கள் குறிப்பிடுகின்றன. அவர் சில சமயம் ஈஸ்வர

வடிவாகும் நிலைக்கு உயர்த்தப்படுவர், அப்போது புராணங்கள் அவரைப் பிரம்மாவென்றழைக்கும். எல்லா மனங்களையும் தொகுதிகளாகக்கொண்ட பிரம்மா, உறங்கும்போது நைமித்தியப் பிரளயம் உண்டாகிறது. அவர் விழிக்கும் போது, பிரம்மாண்டம் வெளித்தோன்றுகிறது. இது சிருஷ்டி எனப்படும். சிருஷ்டி, ஸ்திதி என்பவற்றின் காலங்கள், பிரம்மாவின் பகல் காலத்திற்கும் பிரளயம் அவரது இராக் காலத்திற்கும் நேராகும்.

நாம் உறங்கச்செல்லும் போது உண்மையாகவே நடப்பவை யாது? அதை நாம் கண்டுபிடிக்கக் கூடுமாயின் பிரளயத்தில் நிகழ்வதைப்பற்றிய ஒரு குறிப்பை நமக்குத்தரும். (சுழுத்தி) அயர்ந்த உறக்கத்தில் நாமரூபங்களோடு கூடிய எதன் இருப்பையும் நாம் அறியமாட்டோம். அனுபவமோ ஆசையோ நினைவோ ஒன்றும் மிஞ்சுவதில்லை. பூரணசூனியமாகவேயிருக்கிறது. ஆனல் நாம் விழித்ததும் அவையனைத்தும் பின்னரும் நமது உணர்விற்கு வந்துவிடுகிறது. அவ்வளவுகாலமும் அவை எங்கே சென்றிருந்தது? உறக்கத்தில் அவை முழுதும் அழிவடைவதில்லை என்பது வெளிப்படை. நினைவுகள் ஆசைகள் யாவும் மனதிலே உள்ளடங்கிய நிலையிலே சம்ஸகாரங்கள் (சூக்குமபதிவுகளாக) வடிவமாக நிட்டியமாக அங்கு உள்ளன என்பது புலனுகும். ஒரு பெரு மரத்தின் முழுத்தோற்றமும் அதன் வித்தினுள் காணமுடியாத சக்தி வடிவாக அடங்கியுள்ளன. அச்சக்தியே வி... யின் வழியே சரியான காலத்தில் மரமாகத்தானே வெ... படுகிறது. மரம் விதைக்குள்ளே வெளித்தோன்ருத காரண நிலையில் விதைக்குள் குடியிருப்பதாகவும் நன்கு கூறலாம்.

பிரம்மா எப்படிப் படைக்கின்ருர்? அவர் சூனியத்தினின்றும், எதனையும் படைப்பதில்லை. அவர் தம்மிடத்திலிருந்தே பிரமாண்டத்தை வெளியே தோற்றுவிக்கின்ருர். அவரே பிரபஞ்சமாவார். அவர் எப்படி எப்படி சங்கற்பிக்கிருரோ அப்படியேயாகிருர். அவர் சங்கற்பிப்பதும் ஒரு குறிப்பிட்ட முறைப்படிக்கே. முந்திய கற்பத்தில் நிகழ்ந்த

தை வரையறுத்து அறிந்து தியானிப்பதால் அவர் அம் முறையைக் கண்டு பிடிக்கிறார். காரண நிலையிற் கிடந்து, வெளித்தோன்றுவதற்கெனக் காத்திருக்கும் அனைத்தையும் தியானத்தால் அவர் காண்கிறார். முன்னைய கல்பத்தின் முறைக்கும் வெளித் தோன்றவேண்டிய அவசரத்திற்கும் ஏற்றவாறு அவர்தம்மிடமிருந்தே, தூலமும், சூக்குமமுமான கணக்கற்ற, பொருளையும் வெளித் தோற்றுவிக்க (படைக்க) தொடங்குகிறார். பிரம்மாவின் சமஷ்டி மனத்தின் சங்கற்ப மாத்திரத்தில் இவை யாவும் எவ்வாறு உண்டாகின்றன என்பதைக் கனவு நிலையில் நமக்கு நிகழும் அனுபவங்களோடு ஒப்பிட்டுப் பார்த்தல் நன்று. நமது கனவுகளை உண்டாக்குபவர் யார்? நமது மனங்களே!

சரி, பிரம்மா எவ்வாறு உண்டாக்குகின்றார்? அவரைப் படைப்பவர் யார்? மேலும் அவர் சீவராமையின் அவரும் நம் ஒவ்வொருவரையும் போல் உடலோடு கூடியவராதல் வேண்டும், அவ்வாறாயின் அவரது உடல் யாது? உயிர் யாது? ஷ்டி மனமே (பிரபஞ்சமே) அவரது உடல், ஈஸ்வரனே னுள் இருக்கும் உயிர், இது இந்து மத இருடியரின் கு முறை ஆராய்ச்சி. (சூரியனிலிருந்து சிதறிய அக்கினித் ண்டே நமது பூகோளம் என்று மேல் நாட்டு விஞ்ஞானி ன் கூற்றுக்கு முற்றிலும் மாறு பட்டதே இந்து மத ச்சியாளர் முடிவாகும். அவை கூறியது ஓர் பெரு வ துபோலிருக்கிறது தற்காலம்) மற்றுமத்தியாயங்களில் விஞ்ஞானப் பூமி விளக்கமாய் வரும்.

தோற்றம், சப்த, ரூப, ரச, கந்த முதலியன. ஆகாசமே முதலில் தோன்றுகிறது, அதன் ஒரு பகுதியே வாயுவாக மாறுகிறது, (காற்று) அதன் ஒரு பகுதி மின்னும் தேஜசாகமாறுகிறது. ஒளி, தாரகைகள் மின்னல், அவ்வாறே அப்பு சலமாகவும் அப்புவினின்று, பிருதுவி பூமியாக (மணம் கந்தம்) தோன்றுகின்றன. இப்பஞ்சபூதங்களினாலும்

தன் மாத்திரை (நேரம்) நேரம் காலம் உண்டாகின்றன. இதில் திரிகுணர்த்தம் (முக்குணம்) வெளி வருகின்றன. இதில் சணம், நொடி மா மாத்திரை, விநாடி, நாடி முகூர்த்தம், இராப் பகல், வாரம், கிழமை, பட்ஷம், மாதம் ருது, அயனம், ஆண்டு, வருஷம், யுகம் முதலியன ஆரம் பமாகிறது. ராசத, தாமத, சாத்வீகமாகிய முக்குணங்க ளிலும் படைப்பின் பொருள்களின் சிறப்புக்களை விளங்க வைப்பது சாத்வீகமே! தத்துவ மெனப்படும் எல்லாவகை விகாரங்களையும் உண்டாக்குவது இராசத குணமே. இது இயற்கையிலுள்ள சுறு சுறுப்புகளை விளக்கும் தத்துவ மான புத்தியேயாகும். இப்புத்தி, ஆகாசம் வாயு, தீ, நீர் நிலம், எனும் ஒவ்வொன்றும் இணையாக சூக்குமமாக, ஞானேந்திரியங்களை செவி, தோல், கண், நாக்கு, மூக்கு இவையாகும் அறியாமையும், அசக்தியத்தைத் தருவதே தாமதமெனப் படும். இவையனைத்தும் ஒன்ருகக் கூடி யுத்தி புத்தி மனமாகின்றன. இவ், ஐந்து பூதங்களும் ஒன்று கூடி ஐந்து கருமேந்திரியங்களாகவும் ஐந்து பிராணன் களாகவும் ஆகின்றன. பிரம்மாவின் உடலில் அடங்கி[illegible] மூன்று கோசங்களும் எல்லாம் ஒன்று கூடியே பிரம்[illegible] சூக்கும சரீரத்தைப் பெற்றுள்ளார். இதில் எல்லா உயிர[illegible] பிராணிகளின் உடலங்களும் சூக்குமமாக அடங்கியுள்ளன. பிரபஞ்சம் முழுவதும், போக்தாக்கள் (அனுபவிக்[illegible] உயிர்கள்) போக்கியப் பொருள்கள் (அனுபவிக்கப்[illegible] பொருள்கள்) என இரு கூருகப் பிரிந்து நிற்பன; ஒ[illegible] பத்தின் முடிவில் அதாவது பிரம்மாவின் ஆயுள் கால[illegible]த் திற்குப் பின், பிரம்மாவின் வயதென்ன? 100, இது 4, 320,000 மனித ஆண்டுகளாகும். இவ்வாண்டுகள் முடியும் போது பிரளயம் நிகழ்கிறது. அவ்வமயம் அவர் முற்றும் உடல் வாசனையற்றவராய் பரப்பிரம்மத்தோடு ஐக்கியம் அடைகிருர். இயற்கையில் உள்ள ஒவ்வொன்றும் அவ்வியத் தம் என்னும் பிரகிருதி என்றும் கூறப்படுகின்றன. வெளித் தோன்ருத எல்லையற்ற சக்தி[illegible]டமே மீண்டும் செல்கிறது. (மரம் விதையாகிறது) இரணிய கருப்பரது முத்திப்பேற்

ருல் இவ்வண்ணம் உண்டாகும் பிரமாண்டப் பிரளயம் பிராகிருதப் பிரளயம் எனப்படும். அடுத்த கல்பத்தின் ஆரம்பத்திலே வேருெரு ஜீவர் முந்திய கல்பத்திலே தாம் தேடி வைத்திருந்த புண்ணியத்தின் பயனுக இரணிய கருப் பராகத் தோன்றுகிருர் என்பதே இந்து மத சாரமாகும். இதை உப நிடதங்களும், கீதையும், சைவ சித்தாந்தமும் ஆமோதிக்கிறது. ஆன்மா ஒன்றைச் செய்வதுமில்லை அனு பவிப்பதுமில்லை. அது எவ்வித மாறுபாடும் அடைவதுமில்லை அது யாரையேனும் கொல்வதும் யாராலேனும் கொல்லப் படுவதும், யாங்ஙனம் இயலும்? (கீதை) ஆன்மா பூரணப் பொருளேயாகும்.

# ஆன்மீக உணவு.

உடலுக்கு உணவு தேவைப் படுவதுபோல உயிருக்கு உணவு தேவை. பிரார்த்தனை, ஜபம், சங்கீர்த்தனம், தியா னம் முதலிய ஆன்மீக சாதனைகளே உயிருக்குத் தேவைப் டும் உணவு. குறிப்பிட்ட நேரத்தில் வயிற்றுக்கு உணவு டைக்காவிட்டால் அமைதியை இழந்துவிடுகிருேமல்லவா? சில நாட்கள் தொடர்ந்து பிரார்த்தனை, ஜபம் முதலியவற் றைக் கிரமமாகச் செய்துவந்தபின், ஒரு நேரம் அவற்றைச் ய்யாமல் விட்டாலும் அத்தகைய அமைதியின்மை ஏற் . உடலைப்போலவே உயிருக்கும் வேளா வேளைக்கு வு தேவைப்படுகிறது. சொல்லப்போனுல் உடலைவிட உயிருக்குத்தான் உணவு அதிக முக்கியமானது. தூல சரீ ரத்தின் வளர்ச்சிக்கு உணவு எப்படி அவசியமாகிறதோ? அதுபோலவே சூக்கும சரீரத்தின் வளர்ச்சிக்கு ஆன்மீக உணவு அவசியம். ஜபம் தியானம் ஆகியவற்றை நீங்கள் கிரமமாகச் செய்து வராவிடில் சூக்கும சரீரம் பலவீன மடைந்து விடும். அப்போது தீய எண்ணங்களையும் தீய சமஸ்காரங்களையும் எதிர்க்கும் சக்தி குறைந்துவிடும். சா தனைகளில் மிகக் கிரமமாக இருப்பதன் அவசியத்தை இப் போது உணர்கிறீர்களா?

# நரகமும் பாவமும்

(அருள்சத்தியநாதன்)

'பாவத்தின் சம்பளம் மரணம்' என்கிறது புனிதவிவிலிய நூல். தேவர்களுக்கு நிகராயிருந்த மனிதன், கீழ்ப்படியாமை என்ற பாவத்தைப் புரிந்ததால் மரணத்தைப் பெற்றதாக அது இவ்வாக்கியத்திற்கு ஆதாரம் காட்டுகிறது.

பாவம் தொடர்ச்சியாக பிறப்புகளை மனிதனுக்குத் தருவதாக புத்தமதம் உரைக்கிறது. தனது ஐந்நூறு பிறப்புகளிலும் ஒரு பாவம் அல்லது ஒரு குறை இன்னொரு பிறப்புக்குக் காரணமாக அமைந்தது என்று புத்தர் உரைத்திருக்கிறார்.

பாவங்கள் புரிந்த மனிதனின் நா நரகத்தில் தரை வரை தொங்கும் என நபிகள் நாயகத்தின் மணிமொழி உரைக்கிறது.

இவ்வாறு உலகிலுள்ள, எல்லா சமயங்களும் பாவ[illegible] என்ற சொல்லை மனிதன் கைவிட்டுவிடவேண்டிய ஒன்[illegible] கக் கையாண்டிருக்கின்றன. பாவம் என்ற சொல் கு[illegible] மானதொன்றாகவே இருந்து வருகிறது. 'பாவம் எ[illegible] என்ன? அதற்கும் மனிதனுக்கும் உள்ள தொடர்பு என[illegible]' என்று பலர் சிந்திக்கத்தொடங்கி, இறுதியில் குழப்பத்திற்காளாகி, தடுமாறிப்போகின்றனர். ஏனெனில், சில 'பாவ நிகழ்ச்சி'கள் தர்க்கத்திற்கு மாறுபட்டதாக இருக்கும். மனிதாபிமானம், மனோதத்துவம் ஆகியவற்றைக் கொண்டு பார்க்கும்போது, சில சமயம் பாவம் என்ற சொல்லுக்கே அர்த்தமின்றிப் போய்விடும்!

'தூக்கத்தில் நடக்கும் வியாதியுடைய ஒருவன், அந்த மனோநிலையில் ஒரு கொலையை செய்துவிடுகிறான். மறு உல

கில் அவனுக்கு என்ன தண்டனை கிடைக்கும்? நரகமா?' என்று கேள்வி எழுப்புவார்கள்.

'குடிவெறியில் ஒருவன் மனைவியைக் கொலை செய்ய முயற்சிக்கையில், பக்கத்தில் நின்ற இளைஞனான மகன் தாயைக் காப்பாற்றுவதற்காக தந்தையைத் தாக்க அவன் இறக்கிறான். அந்த இளைஞன் இதன் காரணமாக, பாவம் செய்தவனுவானா? நித்திய நரகமா அவனுக்கு?' என்று சிலர் தர்க்கிப்பார்கள்.

இவர்களுக்கெல்லாம் என்ன பதில் கூறுவது? மதத்தலைவர்களே சில சமயம் திண்டாடித் திணறிப்போய்விடுவர். இப்படியான கேள்விகளுக்கு பதில் சொல்ல முடியாமல். ஆகவே, பாவத்தைப் பற்றியும், அது தொடர்பாக நரகத்தையும் ஆராயத்தொடங்கியிருக்கும் நாம், ஜாக்கிரதையுடன் படிப்படியாக முன்னேறி இலட்சியத்தை அடைவோமாக.

## நமது இலட்சியம்:-

### முதலில் ஒரு கேள்வி:-

சில உலோகாயத வாதிகள், 'நம்மைப்படைத்து, சுகங்களையும் வெற்றிகளையும் தந்து ஆண்டவன் பின் ஏன் அவற்றுக்கு இடைஞ்சலாகத் துன்பங்களையும், தோல்விகளையும் தர வேண்டும்' எனக்கேட்கின்றனர்.

உண்மையாகப் பார்க்கப்போனால், நாம் வாழ்வது இந்த வெற்றிகளாலும் போகங்களாலுமல்ல. உண்மையான இன்பத்தை இங்கே அடைகிறோமில்லை. ஒருவன் வளத்துடன் வாழ்கிறான் என்றால், வாழ்வை மகிழ்ச்சியுடன் நடத்துகிறான் என்றால், அதன் அர்த்தம் அவன் பல தோல்விகளையும் துன்பங்களையும் சந்தித்திருக்கிறான் என்பதே. இவையே, மனிதனொருவனை உற்சாகத்துடன் உழைக்கச்செய்கின்

றன. வாழச்செய்கின்றன. சற்று ஆழமாகப் பார்ப்போமானால், இதைத் தெரிந்துகொள்ளலாம்.

தோல்வியும், துன்பமுமே வெற்றியின் அடிப்படை. துன்பம் அல்லது தோல்வி ஏற்படும் போதுதான் நம் உள்ளம் உறுதிகொள்கிறது. அதை வெல்ல வேண்டும் என்ற உணர்ச்சி மேலிடுகிறது. அவன் வெற்றியை நோக்கி முன்னை விட வேகத்துடன், முயற்சியுடன் அப்போதுதான் முயற்சிக்கிறான். அப்படி முயற்சியுடன் அடைகிற வெற்றியில் தான் உண்மை இன்பத்தை அநுபவிக்க இயலும். துன்பத்தைப் படிகளாகக்கொண்ட வெற்றிமாளிகையை நாம் இவ்விதம் அடையும்போது, அனுபவம், திறமை மாத்திரமா கிட்டுகிறது? இன்னொரு ஆத்மிக உண்மையினையும் இங்கு காணுகிறோம்.

உலகிலுள்ள ஒவ்வொரு உயிரும் - ஒரு அணுவும்கூட— ஏதாவது ஒரு இலட்சியத்தின் பேரிலேயே - சில கடமைகளை நிறைவேற்றும் பொருட்டே - தோன்றுகின்றன. அதன் இலட்சியம் உலகில் முடிந்ததும், அவை அதற்கான பல களுடன் உலகை விட்டு மறைந்து விடுகின்றன. அ கடமைகளை நிறைவேற்றும் பொருட்டு மீண்டும் தோன் லாம்; அல்லது பிரம்மமாகலாம். எந்நேரமும், தம்மைய யாமலே தம் கடமைகளை நிறைவேற்றிக் கொண்டிருக் இந்த உயிர்களுக்கு, தம் இலட்சியத்தை ஊக்கமுட விரைவுடனும் அடையவும், உயிர்களுக்கு அவற்றின் லுள்ள சுவை அல்லது பற்று குறையாமலிருக்கவும் இயற்கை அன்னை இத்தகைய துன்பங்களையும், தோல்விகளையும் அவற்றை உற்சாகப்படுத்தும் நோக்குடன் அளித்து வருகின்றாள். நாம் அனைவரும் இதற்கு உடன்பாடே. 'என்னால் துன்பங்களைத் தாங்கமுடியவில்லையே?' என்று முணங்குவோரை நாம் சந்தித்திருக்கலாம். தாங்கமுடியாத துன்பத்தை இயற்கை யாருக்குமே அளிப்பதில்லை; அளித்ததுமில்லை. அதெல்லாம் வீண்பேச்சு. சோம்பிய பலவீனமான மனதிலிருந்துதான் இப்படியான எண்ணங்கள் எழும்.

Registered at the G. P. O. as a Newspaper M. L. 59/300:

# சந்தா நேயர்களின் முக்கிய கவனத்திற்கு!

1. சந்தா செலுத்தாதவர்கள் அத்தனை பேருக்கும் நினைவூட்டல் கடிதம் எழுதியுள்ளோம். சிரமம் பாராது உரியதொகையினை உடன் அனுப்பிவைத்துச் சோதியின் வளர்ச்சிக்கு உதவ வேண்டுகின்றோம்.

2. சந்தா அனுப்புவோரும் விலாசமாற்றம் செய்வோரும் தத்தம் சந்தா இலக்கங்களைக் குறிப்பிட விரும்புகின்றோம். அங்ஙனம் குறிப்பிடுவதனால் காரியாலய வேலை இலகுவாகின்றது என்பதை அன்புடன் அறியத்தருகின்றோம்.

3. ஆயுள் சந்தாதாரராகச் சேர விரும்புவோர் நூறு ரூபாய் அனுப்பி வைக்குமாறு அன்புடன் வேண்டுகின்றோம். ஆயுள் சந்தாதாரரா[illegible] சேருவதனால் சோதியின் வளர்ச்சிக்கு [illegible] புரிந்தவர்களாவீர்கள்.

4. தங்கள் நண்பர்களில் ஒருவரையாவது ச[illegible] தாரராகச் சேர்த்து உதவினால் சோதி[illegible] வளர்ச்சிக்குப் பெருந்தொண்டு செய்[illegible] ஆவீர்கள்.

## ஆத்மஜோதி நிலையம்,

## நாவலப்பிட்டி, (இலங்கை.)

அச்சிடுவிப்போர்:— ஆத்மஜோதி நிலையத்தினர்.
அச்சிடுவோர்:— ஸ்ரீ ஆத்மஜோதி அச்சகத்தினர்.
வெளியிட்ட திகதி:— 15-5-71.